பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை –28.

**சுற்றறிக்கை**

**ந.க.எண். 29945/சி1/2015 நாள் 25.10.2018.**

பொருள்: ஆவணப் பதிவு – வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகள் அடங்கிய மனைகள் பதிவு – சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் – நகர் ஊரமைப்புத்துறை ஆகியோரால் கொள்கை அளவில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளுக்கு உரிய உள்ளாட்சி துறையால் உரிய மேம்பாட்டு கட்டணம் மற்றும் வரன்முறைக்கட்டணம் வசூலித்தப்பின் அளிக்கப்படும் இறுதி வரன்முறைப்படுத்தப்பட்ட ஆணையை இணைத்து ஆவணம் பதிவு செய்தல் – தொடர்பாக.

பார்வை:

1. ஆணையர், நகர் மற்றும் ஊரமைப்பு துறை எண்.13193/2017–LA1 நாள்.09.10.2017.
2. பதிவுத்துறைத்தலைவர் கடித எண். 29945/சி1/2015 நாள் 13.10.2017.
3. பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண்29945/சி1/2015 நாள் 10.08.2018.
4. நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–5, நேர்முகக் கடித எண்.15510/2018டிபி3, நாள்.03.10.2018.
5. அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை சீராய்வு கூட்ட நாள்.11.10.2018.

******

பார்வை 1–ல் காணும் கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவினை பொறுத்து முதல் நிலையாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் / நகர் மற்றும் ஊரமைப்பு துறை மண்டல அலுவலகத்தால் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்படுகிறது எனவும், இரண்டாம் நிலையாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் உரிய

மேம்பாட்டு கட்டணம் மற்றும் வரன்முறை கட்டணம் உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்ட பின்னர் அங்கீரிக்கப்படாத மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி வரன்முறை ஆணை வழங்கப்படுகிறது எனவும், ஆனால், மேம்பாடு மற்றும் வரன்முறைக்கான கட்டணம் வசூலிக்கப்படாத நிலையிலேயே கொள்கை அளவிலான ஒப்புதலின் அடிப்படையில் ஆவணங்கள் பதிவுக்கு அனுமதிப்பதாக தங்களின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, பார்வை (2)–ல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு மேற்படி கடிதத்தின் நகல் அனைத்து அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

2. பார்வை (3)–ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை ஆகியோரால் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகார ஆணை நகலை ஆவணத்துடன் இணைத்து பதிவு செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

3. பார்வை (4)–ல் காணும் கடிதத்தின் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் / நகர் மற்றும் ஊரமைப்பு துறை ஆகியோரால் அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி உரிய தொகை நகராட்சிக்கு செலுத்தி ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் கொள்கை அளவில் மட்டும் ஒப்புதல் வழங்கப்படுகிறது எனவும், மேற்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு உரிய வரன்முறை கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் வசூல் செய்யப்பட்டபின் தனிப்பட்ட மனைக்கு இறுதி உத்தரவும் வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மேற்கண்டவாறு வரன்முறைப்படுத்தப்பட்டமைக்கான கட்டணம் செலுத்தப்படாமல், கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனைகள் பதிவுக்கு அனுமதிக்கப்படுவதாக புகார் பெறப்பட்டுள்ளது.

5. எனவே, 11.10.2018 தேதியில் நடைபெற்ற அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை சீராய்வு கூட்டத்தின்போது தெரிவித்தவாறு

பெருநகர வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்புத் துறையினால் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு சம்பந்ததப்பட்ட உள்ளாட்சி துறையில் உரிய மேம்பாட்டு கட்டணம் மற்றும் வரன்முறைக்கட்டணம் செலுத்தப்பட்ட பின்பு அளிக்கப்பட்ட உள்ளாட்சி துறையின் இறுதி உத்தரவின் நகலை ஆவணத்துடன் இணைத்து ஒளிவருடல் செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

26/10/2018

பதிவுத்துறைத்தலைவர்

பெறுநர்:

அனைத்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள்
அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்
அனைத்து பதிவு அலுவலர்கள்

நகல்:

1. நேர்முக உதவியாளர் (தனி)
   மாண்புமிகு வணிகவரி மற்றம் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்
2. அரசு முதன்மைச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
3. பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை.
4. அனைத்து உயர் அலுவலர்கள், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்

Verified RealEstate™